# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

## MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

267, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K புதூர், மதுரை - 625 007

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி 18.5.19.

18.05.2019ம் தேதி சனிக்கிழமை எங்களது சங்கத்தின் கூட்டமும், புகை பரிசோதனை கருவிகளின் செயல்பாட்டுத்திறன் பற்றிய கூட்டமும் மதுரை செய்தியாளர்கள் அரங்கத்தில் பொறுப்பாளர்கள் தலைவர் ராமகிருஷ்ணன், செயலாளர் ராஜசேகரன், பொருளாளர் நந்தகோபால் மற்றும் அனைத்து சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் புகை பரிசோதனை கருவிகளின் கம்பெனி பொறுப்பாளர்கள் நிட்டல் இந்தியா லிமிடெட்., AVL இந்தியா லிமிடெட்., மேனோடெக் மற்றும் மார்ஷல் முதலானோர்கள் கலந்து கொண்டு தங்களுடைய கருவிகளை கொண்டு வாகனத்தில் பொறுத்தி பெரி வாகன் மூலம் புகை பரிசோதனை செய்து சான்றிதழை வழங்கினார்கள்.

மற்றும் நம் சங்க உறுப்பினர்களின் மூலம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மத்திய, மாநில அரசின் வேண்டுகோளுக்கு இணங்க நாம் அனைவரும் மத்திய அரசின் வாகன் மென்பொருள் மூலம் புகை பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்க வேண்டும்.
2. வாகன் மென்பொருள் மூலம் சோதனை செய்யும் சமயத்தில் வேறு போலியான மென்பொருளை உபயோகித்து புகைச் சான்றிதழ்களை வழங்கக் கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. நமது புகைச்சான்றிதழ் கட்டணம் தமிழக அரசால் கடந்த 1998ம் வருடம் போடப்பட்ட நிலையில்தான், இன்றுவரை உள்ளது. அதை மாற்றி எங்களுக்கு சான்றிதழ் கட்டணத்தை உயர்த்தி தரும்படி கடந்த பத்து (10) ஆண்டுகளாக ஆணையர்களிடம் முறையிட்டும் இதுவரை எந்தவொரு ஆணையரும் கட்டணத்தை உயர்த்தி வழங்க ஆவன செய்யவில்லை. ஆகவே தற்பொழுது பற்பல பொருட்களின் விலையேற்றத்தினாலும் தொழிலாளர் சம்பளம், இட வாடகை, வங்கிகளின் கடன் தொகைக்கு வட்டி முதலியவைகளின் உயர்வினாலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நமது புகைச் சான்றிதழ் கட்டணத்தை கீழ்க்கண்ட விகிதங்களில் உயர்த்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

1. இரண்டு சக்கர வாகனம் ரூ. 100
2. மூன்று சக்கர வாகனம் ரூ. 150
3. நான்கு சக்கர வாகனம் ரூ. 200
4. ஆறு சக்கர வாகனம் ரூ. 300

தலைவர்